# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகள் தொடர்பான செய்திகள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகள் தொடர்பான செய்திகள்

- ❖ அறிவு அற்றம் காக்கும் கருவி என்றவர் - திருவள்ளுவர்.
- ❖ அறிவின் நுண்ணிலை வளர்ச்சியே - அறிவியல்.
- ❖ அறிவியல் வாழ்வை வளப்படுத்துகிறது, மொழியை பயன்படுத்துகிறது என்பர் அறிஞர்.
- ❖ உலகம் உருண்டை என்பதை 16 ம் நூற்றாண்டிற்கு பிறகே மேலை நாட்டினர் உறுதி செய்தனர்.

- "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
  அளப்பருந் தன்மை வளப்பெருங்காட்சி" **- திருவாசகம்**

- ❖ உலகம் என்ற சொல் உலவு என்ற சொல்லில் இருந்து தோன்றியது. உலவு என்பது சுற்றுதல் என்று பொருள் தரும்.
- ❖ ஞாலம் என்பது ஞால் என்ற சொல்லிலிருந்து தோன்றியது. ஞால் என்பது தொங்குதல் என்று பொருள் தரும்.

- "வறிது நிலைஇய காயமும்
  வலவன் ஏவா வானூர்தி" **- புறநானூறு**

- ❖ தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த - பதிற்றுப்பத்து (கரும்பை பிழியும் எந்திரம்)
- ❖ அந்தக் கேணியும் எந்திரக் கிணறும் - பெருங்கதை (ஆழ்துளை கிணற்றை குறிப்பது)

- ❖ பெருங்கதையில் வரும் எந்திரயானை டிராய் கிரேக்க தொன்மத்தின் போருடன் இணைத்து பேசப்படும் எந்திரக்குதிரையுடன் ஒத்தது.

- ஒருமை தோற்றத்து ஐவேறு வனப்பின்
  இலங்குகதிர் விடுஉம் நலங்கெழு மணிகளும் **- சிலப்பதிகாரம்**

- ❖ தமிழர்கள் மண்ணை நிறத்தின் அடிப்படையில் செம்மண் எனவும், சுவையின் அடிப்படையில் உவர் நிலம் எனவும், தன்மையின் அடிப்படையில் களர் நிலம் எனவும் பிரித்தனர்.

- ❖ செம்புலப் பெயல் நீர்போல - குறுந்தொகை (செம்மண் நிலத்தின் பயன்).

- ❖ அகல்வயல் பொழிந்தும் உறுமிடத் துதவா உவர்நிலம் - (உவர்நிலம் பயனற்றது) - புறநானூறு.

- ❖ பயவாக் களரனையர் கல்லாதவர் - திருக்குறள் (களர்நிலம் பயனற்றது)
- ❖ அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி - ஔவையார்.
- ❖ கடுகை துளைத்து ஏழ் கடலைப் புகட்டி - இடைக்காடனார்.
- ❖ ஓர் அணுவை சதகூறிட்ட கோணினும் உளன் - கம்பர்.
- ❖ உடம்பார் அழியின் உயிரார் அழிவர் - திருமூலர்.
- ❖ உடல் உறுதியாய் இருப்பதற்கு வாதம், பித்தம், சீதம் மூன்றின் சமநிலையே காரணம்.
- ❖ மருந்தாகித் தப்பா மரத்தற்றால் - திருக்குறள்.
- ❖ மழையை அமிழ்தம் என்றார் - திருவள்ளுவர்.
- ❖ நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி - திருக்குறள்.
- ❖ 18 சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்த மருத்துவம் ஆயிற்று.

- ❖ தேரையர், அகத்தியர், போகர், புலிப்பாணி சித்தர்களின் நூல்கள் இன்று தமிழரின் உடல் நோயை போக்குகின்றன.

- "உடம்பிடை தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் ஊற்றி
  அடல்உறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்" **- கம்பர்**

- ❖ மணிமேகலையின் தோழி சுதமதியின் தந்தை கண்ணப்பணை மாடு முட்டியதால் சரிந்த குடலை சரிசெய்த புத்த.துறவியின் செயலை மணிமேகலை எடுத்துக்காட்டுகிறது.
- ❖ புல்லாகிப் பூடாய் - திருவாசக வரிகள் பல்வகை உயிரிகளின் பரிணாம வளர்ச்சியை விரிவாகக் கூறுகின்றன - மாணிக்கவாசகர்.
- ❖ மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில் கிருமி செருவினில் பிழைத்தும் - திருவாசகம்.
- ❖ மருந்தாகி தப்பா மரத்தற்றால் என கூறியவர் - திருவள்ளுவர்.

- "திணையளவு போதா சிறும்புல் நீர்
  நீண்ட பனை அளவு காட்டும் படித்தால்" **- கபிலர்**

**ராமன் விளைவு - சாத்தனார் விளைவு:**

- ❖ ஒளி ஊடுருவும் போது ஒளியின் நிறம் மாறுபடுவதை அறிஞர் C.V. ராமன் கண்டார்.
- ❖ பளிங்கு பொருட்கள் இடையே ஒளி புகுந்து வெளியில் வரும் போது ஒளியின் அலை நீளத்தில் மாற்றம் ஏற்படுகிறது என்று ராமன் கண்டார்.

**இதையே சாத்தனார்**

- கண்ணுக்கு வழி வைத்து காதுக்கு திரையிடும்
  அழகிய மண்டபத்தை
- "விளிப்பு அறைபோகாது மெய் புற திடூஉம்
  பளிக்கறை மண்டபம்"